# ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் கர்நாடக அரசு வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா தாக்கல் செய்த எழுத்து மூலமான வாதம்:

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா தரப்பு தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய வழக்குகளில் வழக்கை பதிவு செய்த விசாரணை அமைப்பு தான் எதிர்வாதியாக சேர்க்கப்பட வேண்டும். உச்சநீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சட்டத்தின்படி இந்த வழக்கைப் பொருத்தவரை கர்நாடக அரசு தான் வழக்குத் தொடர்ந்த அமைப்பாகும். எனவே, கர்நாடக அரசை எதிர்வாதியாக சேர்த்து அது நியமித்த அரசு சிறப்பு வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட வேண்டும். ஆனால் இந்த வழக்கில் கர்நாடக அரசு எதிர்வாதியாக சேர்க்கப்படவில்லை. தொடக்கத்தில் அவ்வாறு சேர்க்கப்படாதது மட்டுமின்றி, வழக்கு விசாரணையின் போது கர்நாடக அரசு எதிர்வாதியாக சேர்க்கப்படாததை பலமுறை சுட்டிக்காட்டியும் அந்தக் குறை நிவர்த்தி செய்யப்படவில்லை. இன்றைய தேதி வரை கர்நாடக அரசு எதிர்வாதியாக சேர்க்கப்படவில்லை. இது மிகப்பெரிய குறைபாடு ஆகும். சொத்துக்குவிப்பு வழக்கை தொடர்ந்த கர்நாடக அரசு எதிர்வாதியாக சேர்த்து, அதன் வாதம் கேட்கப்படாத பட்சத்தில் ஜெயலலிதா தரப்பினர் கோருவதைப் போல அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்ய முடியாது. மேல்முறையீட்டு வழக்கில் கர்நாடக அரசு எதிர்தரப்பாக சேர்க்கப்படாததால் அதன் சார்பில் அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படவில்லை. இந்த ஒற்றைக் காரணத்தால் இந்த மேல்முறையீட்டு மனு மீதான ஒட்டுமொத்த விசாரணையும் வீணாகி விட்டது. எனவே, மேல்முறையீட்டு மனுக்கள் செல்லாதவை என்று கூறி தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

ஒரு குற்றவழக்கு ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றப்படும் போது அந்த வழக்கைத் தொடரும் அமைப்பாக யார் செயல்படுவது என்பது ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் **Vs** தமிழக அரசு வழக்கில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. அதன்படி தமிழ்நாட்டிலிருந்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட இந்த வழக்கில் வழக்கை நடத்தும் அமைப்பு கர்நாடக அரசு தான். கடந்த 27.04.2015 அன்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் இது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறது.

> ‘‘ கர்நாடக மாநில அரசு தான் இந்த வழக்கை நடத்துவதற்கான
> முழு உரிமையையும் பெற்ற அமைப்பாகும். எனவே, அரசு வழக்கறிஞரை
> நியமிக்கும் அதிகாரம் கர்நாடக அரசுக்குத் தான் உண்டு’’.

இந்த மேல்முறையீட்டு மனுக்கள் ஏற்கத்தக்கவை அல்ல என்பதை மேற்குறிப்பிட்ட கருத்துக்களே தெளிவுபடுத்தும்.

## வழக்கின் சுருக்கமான பின்னணி

இந்த வழக்கின் 232 ஆவது சாட்சியான சுப்பிரமனியன் சாமி கடந்த 14.06.1996 அன்று அளித்த தனிநபர் புகாரின் அடிப்படையில் ஜெயலலிதாவுக்கு எதிராக வழக்கு நடவடிக்கைத் தொடங்கப்பட்டது. 21.06.1996 அன்று சுப்பிரமணியன் சாமியின் வாக்குமூலத்தை பதிவு செய்த சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் ஊழல் தடுப்புச் சட்டத்தின் 17 ஆவது பிரிவு, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 202 ஆவது பிரிவு ஆகியவற்றின்படி ஜெயலலிதா மீதான குற்றச்சாற்றுகள் குறித்து விசாரணை நடத்த ஆணையிட்டது. தொடர்ந்து இவ்வழக்கில் 4 எதிரிகள் மீதும் ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகள் 13(2), 13 (1) (e) மற்றும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 120–b, 109 ஆகியவற்றின் கீழ்

குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டது. 05.06.1997 அன்று இந்த வழக்கில் குற்றச்சாற்றுகள் பதிவு செய்யப்பட்டன. அதன்பின் 259 அரசுத் தரப்புச் சாட்சிகள், 99 எதிர்தரப்புச் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு. ஏராளமான ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. தொடர்ந்து இவ்வழக்கில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 313 ஆவது பிரிவின் கீழ் எதிரிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டு 27.09.2014 அன்று அனைத்து எதிரிகளும் தண்டிக்கப்பட்டனர். அதனடிப்படையில் இந்த மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வழக்குத் தொடர்பாக கடந்த 27.04.2015 அன்று உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையின்படி சொத்துக்குவிப்பு வழக்கை நடத்தும் அமைப்பின் சார்பில் இந்த எழுத்துபூர்வ வாதத்தை நான் தாக்கல் செய்கிறேன்.

## <u>குற்றச்சதி மற்றும் சொத்துக்களைக் குவித்தல்</u>

இந்த வழக்கில் குற்றஞ்சாற்றப்பட்டுள்ள 4 பேர் மீதும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 120–b பிரிவின் கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றச் சதி குற்றச்சாற்றும் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகள் 13(2), 13 (1) (e) ஆகியவற்றின் கீழ் தண்டிக்கத்தக்க வகையில் ஜெயலலிதா செய்த குற்றங்களுக்கு சசிகலா, இளவரசன், சுதாகரன் ஆகிய மூவரும் உடந்தையாக இருந்திருக்கின்றனர். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்திருக்கிறார். அந்த பதவியை தவறாக பயன்படுத்தி வருவாய்க்கு மீறிய வகையில் சொத்துக்களை வாங்கிக் குவித்துள்ளார். இதற்கு மற்ற மூவரும் உதவியாக இருந்துள்ளனர். வழக்கமாக அரசு ஊழியராக இருப்பவர் தவறான வழியில் ஈட்டிய சொத்துக்களை தனது பெயரில் வைத்திருந்தால் அதை விசாரணை அதிகாரிகள் எளிதாக கண்டுபிடித்துவிடுவார்கள் என்பதால் மற்றவர்கள் பெயரில் தான் பதிவு செய்து வைத்திருப்பார்கள். அதனால் தான் பொது ஊழியர் ஒருவர் பதவியில் இருந்த காலத்தில் தனது பெயரிலோ அல்லது தன்னை சார்ந்தவர்கள் பெயரிலோ கணக்கில் காட்ட முடியாமலும், வருவாய்க்கு மீறிய வகையிலும் சொத்துக்களைச் சேர்த்திருந்தால் அது ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகள் 13(2), 13 (1) (e) ஆகியவற்றின் கீழ் தண்டிக்கத்தக்கதாகும்.

இந்த வழக்கில் ஜெயலலிதா தனது பெயரிலும், மற்ற எதிரிகள் பெயரிலும் 32 வணிக நிறுவனங்களைத் தொடங்கியிருக்கிறார். இந்த நிறுவனங்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டதை நிரூபிக்க போதிய ஆவண ஆதாரங்கள் உள்ளன. இவற்றின் பெயரில் நிலங்கள் வாங்கப்பட்டத்தை இந்த வழக்கின் 71 ஆவது சாட்சியும் தோட்டக்கலைத்துறை அதிகாரியுமான ராதாகிருஷ்ணன் விளக்கியுள்ளார். இந்த நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டது குறித்து 94 ஆவது சாட்சியான லக்ஷ்மிநாராயணா விளக்கியுள்ளார். இிதி தொடர்பான ஆவணங்கள் ஜெயலலிதாவின் இல்லத்தில் தான் பதிவு செய்யப்பட்டன என்று 159 ஆவது சாட்சியான ராஜகோபாலன் சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால், இந்த சொத்துக்கள் அனைத்தும் தவறான வழியில் ஈட்டப்பட்ட வருவாயின் மூலமாகத் தான் வாங்கப்பட்டன என்பதை அரசுத் தரப்பு ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்பது தான் ஜெயலலிதா தரப்பின் வாதமாக உள்ளது. உண்மை என்னவென்றால் இவை தவறாக ஈட்டப்பட்ட வருவாயிலிருந்து தான் வாங்கப்பட்டன என்பதை அரசுத் தரப்பு சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபித்திருக்கிறது. இதை நேரடி சாட்சியத்தின் மூலம் நிரூபிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையில் தான் நிரூபிக்க முடியும். பல்வேறு சந்தர்ப்பங்கலைக் கொண்டு தான் நீதிமன்றங்கள் ஒரு முடிவுக்கு வரமுடியும்.

இந்த வழக்கின் முதல் எதிரியான ஜெயலலிதாவுக்கும் மற்றவர்களுக்கும் இடையிலான உறவும் பல்வேறு சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையில் அரசுத் தரப்பால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதை குற்றஞ்சாற்றப்பட்டவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ள

சொத்துக்கள் அனைத்தும் 1.07.1991 முதல் 30.4.1996 வரையிலான காலகட்டத்தில் தான் வாங்கப்பட்டுள்ளன. இந்த காலகட்டத்தில் ஜெயலலிதா தான் தமிழக முதலமைச்சராக இருந்தார். ஜெயலலிதாவும் வழக்கில் குற்றஞ்சாற்றப்பட்டுள்ள மற்றவர்களும் ஜெயலலிதாவுக்கு சொந்தமான எண் 36 போயஸ் தோட்ட இல்லத்தில் தான் வாழ்ந்தனர். ஜெயலலிதாவும், சசிகலாவும் ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி எண்டர்பிரைசஸ் ஆகிய நிறுவனங்களில் பங்குதாரர்களாக இருந்தனர். இவர்கள் ஒன்றாக செயல்பட்டனர் என்பதை இதன் மூலம் நிரூபிக்க முடியும்.

இந்த வழக்கில் இன்னும் சில சுவையான தகவல்கள் உள்ளன. ஜெயலலிதாவைத் தவிர்த்து சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூவருக்குமே தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் கிடையாது. இந்த வழக்கின் மூன்றாவது எதிரியான சுதாகரன் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் ஆவார். இவர் சசிகலாவுக்கு நெருங்கிய உறவினராவார். சசிகலாவுக்கும் இளவரசிக்கும் இடையிலான உறவும் நிரூபிக்கப்பட்டு அதை அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்த வழக்கின் ஆவணங்களை நன்றாக அலசி ஆராய்ந்ததன் அடிப்படையில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய மூவருக்கும் சொத்துக்களை வாங்கும் அளவுக்கு வருவாய் இல்லை என்பதையும், ஜெயலலிதா தவறான வழியில் ஈட்டிய பணத்தை அவர்கள் உருவாக்கிய நிறுவனங்களில் முதலீடு செய்து அவற்றின் மூலம் தான் சொத்துக்களை வாங்கியுள்ளனர். அந்த நிறுவனங்களில் பல எந்த விதமான வணிகத்தையும் மேற்கொள்ளவில்லை; லாபமும் ஈட்டவில்லை. ஜெயலலிதா ஈட்டும் பணத்தின் மூலம் சொத்துக்களை வாங்குவதற்காக மட்டும் தான் அந்த நிறுவனங்கள் பயன்படுத்தப்பட்டன. இதுதொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் ஆய்வு செய்த விசாரணை நீதிமன்றத்தின் நீதிபதி தமக்கு திருப்தியளிக்காத ஆவணங்களை நிராகரித்துவிட்டு முழுமையாக திருப்தியளிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் மட்டும் தீர்ப்பளித்திருக்கிறார்.

விசாரணை நீதிமன்ற தீர்ப்பு ஆணையின் 96.9 ஆவது பத்தியில் ஜெயலலிதா, சசிகலா ஆகியோரின் வங்கிக் கணக்குகளில் இருந்த பணம் மிகவும் சொற்பமானது; ஆனால், அவர்கள் இருவரும் 52 வங்கிக் கணக்குகளில் இருந்து மாற்றி மாற்றி பணத்தை பரிமாற்றம் செய்து கொண்டிருப்பதை நீதிபதி சுட்டிக்காட்டியிருக்கிறார். 96.10 ஆவது பத்தியில் ஜெயலலிதா தரப்பினருக்கு பல்வேறு வங்கிகளில் பல்வேறு கணக்குகள் இருந்த போதிலும் அவற்றை அவர்கள் ஒன்றாகத் தான் கருதினார்கள் என்றும், அதனடிப்படையில் தான் பணப்பரிமாற்றங்கள் நடைபெற்றன என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜெயலலிதா முறைகேடான வழிகளில் சேர்த்த பணம் பல்வேறு வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து தான் சொத்துக்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகிறது.

தீர்ப்பு ஆணையின் 97 ஆவது பத்தியில் ஜெயலலிதா தரப்பினரின் கணக்கிலும், அவர்கள் தொடங்கிய நிறுவனங்களிலும் பெருமளவில் பணம் சேர்க்கப்பட்டிருப்பதையும், அந்த பணம் எங்கிருந்து வந்தது என்பதை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை என்பதையும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஒருவர் சொத்துக்களை வாங்கிக் குவிக்கும் போது அந்த சொத்துக்களை வாங்குவதற்கான பணம் எங்கிருந்து வந்தது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடையது என்பது தான் சட்டப்படியான நடைமுறை ஆகும். ஆனால், இந்த வழக்கில் குற்றஞ்சாற்றப்பட்டவர்களால் தங்களின் சொத்துக்களை வாங்குவதற்கான பணம் எங்கிருந்து வந்தது என்பதை நிரூபிக்க முடியவில்லை. அதேநேரத்தில் குற்றஞ்சாற்றப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளில் பெருமளவில் பணம் முதலீடு செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் அரசுத் தரப்பிடம் இருந்தன. எனவே, இவை அனைத்தும் ஜெயலலிதாவுக்கு சொந்தமானவை என்பதையும், இந்த பணம் எங்கிருந்து வந்தது

என்பதை அவரால் திருப்தியளிக்கும் வகையில் நிரூபிக்க முடியவில்லை என்பதையும் அரசுத் தரப்பு நிரூபித்திருந்தது.

இந்த வழக்கின் ஆவணங்களை மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்தாலும், இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் ஜெயலலிதா ரூ.55 கோடிக்கும் அதிகமான சொத்துக்களை வாங்கிக் குவித்திருப்பதை நிரூபிக்க முடியும். இவை இந்த வழக்கின் மற்ற எதிரிகள் பெயரிலும், நிறுவனங்கள் பெயரிலும் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை ஜெயலைதாவுக்கு சொந்தமானவை தான். எனவே, ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகள் 13(2), 13 (1) (e) ஆகியவற்றின் கீழ் தண்டிக்கத்தக்க வகையிலான குற்றத்தை ஜெயலலிதா செய்திருக்கிறார் என்பதை அரசுத் தரப்பு நிரூபித்திருக்கிறது.

பினாமி பரிமாற்றச் சட்டம் இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றொரு வாதம் எதிர்த்தரப்பில் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதை ஏற்க முடியாது. பொது ஊழியராக இருந்த ஜெயலலிதா மற்றவர்களின் பெயர்களின் சொத்துக்களை வாங்கிக் குவித்திருப்பதால் பினாமிச் சட்டம் இந்த வழக்கிலும் பொருந்தும்.

## 1991–96 காலத்தில் ஜெயலலிதா தரப்பின் வருவாய்

இந்த வழக்கின் ஆவண எண் 2329–ன் படி 1991–96 காலத்தில் ஜெயலலிதா மற்றும் அவரைச் சார்ந்தவர்களின் மொத்த வருவாய் ரூ.9,34,26,053.56 ஆகும். தங்களின் சில வருவாய்கள் கணக்கில் சேர்க்கப்படவில்லை என்று ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்டாலும், அவ்வாறு ஏற்காதது சரியானது தான் என்று விசாரணை நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. எனினும் ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்டுள்ள சில கணக்குகளை ஏற்றுக்கொண்ட சிறப்பு நீதிமன்றம் அவர்களின் மொத்த வருமானம் ரூ. 9,91,05,094.75 என கணக்கிட்டது. விசாரணை நீதிபதியின் இந்த மதிப்பீடு மிகவும் சரியானது.

## நமது எம்.ஜி.ஆர். சந்தாத் திட்டத்தின் மூலம் ரூ.13,89,19,475 பெறப்பட்டது தொடர்பான கருத்துக்கள்

வருவாய்க்கு மீறிய வகையில் சொத்துக்களை குவித்ததாக அரசுத் தரப்பில் கூறப்பட்ட குற்றச்சாற்றை பொய்யாக்கும் வகையில், ஜெயலலிதாவும், சசிகலாவும் பங்கு தாரர்களாக உள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் நமது எம்.ஜி.ஆர் நாளிதழை இலவசமாக வழங்குவதாக உறுதியளித்து வட்டி இல்லா வைப்பீடாக ரூ.13 கோடி பெறப்பட்டது என்று ஜெயலலிதா தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால், இது பொய்யான வாதம் என்பதை அரசுத் தரப்பு நிரூபித்தது. அதுமட்டுமின்றி இதற்காக பொய்யான ஆதாரங்களைத் தாக்கல் செய்திருப்பதாகவும் அரசுத் தரப்பு நிரூபித்தது. நமது எம்.ஜி.ஆர். சந்தாத் திட்டம் 1990 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதாகவும், 1992–93, 1993–94, 1994–95 ஆகிய வருமான வரி கணக்கீட்டு ஆண்டுகளில் இந்த தொகை பெறப்பட்டதாக ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்டது. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், இவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது தொடர்பான வருமான வரிக் கணக்குகள் இந்த வழக்குப் பதிவு செய்த பிறகு தான் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. 1992–93 ஆம் ஆண்டுக்கான வருமானவரி கணக்குகள் 06.11.98 அன்றும், 1994–95 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் 17.03.98 அன்றும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு தான் ஜெயலலிதா தரப்புக்கு இப்படி ஒரு யோசனை தோன்றியதாக தெரிகிறது. அதன் பின் வருமான வரித்துறையினரின் உதவியுடன் தான் இந்த கணக்குகளை தாக்கல் செய்துள்ளனர். சந்தா வசூலிக்கப்பட்டதற்கான ரசீதுகளை வருமானவரித்துறையினர் கேட்ட போது, அதை பல பெட்டிகளில் வைத்து டாட்டா சுமோ வாகனத்தில் எடுத்து வந்ததாகவும், அப்போது அவை திருட்டு போனதாகவும் ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்டது.

இதுதொடர்பாக காவல்துறையிடம் புகார் அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தொடக்க கட்ட விசாரணையின் போதே இந்த ஆவணங்கள் காணாமல் போய்விட்டதாக கூறிய ஜெயலலிதா தரப்பினர், ஒரு கட்டத்தில் இந்த ஆவணங்களை வருமான வரித்துறையிடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. ஆனால், அவற்றை ஆய்வு செய்த சிறப்பு நீதிபதி அந்த ஆவணங்கள் பொய்யானவை என்பதை உறுதி செய்தார். இந்த வழக்கில் 88 ஆவது எதிர்தரப்பு சாட்சியான தணிக்கையாளர் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை நீதிபதியிடம் கூறியிருக்கிறார். இந்த விவரங்களை மீண்டும் மீண்டும் விளக்குவதைத் தவிர்க்க விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆணையின் 50.01 முதல் 50.23 வரையிலான பத்திகளை படித்து அறிந்து கொள்ளலாம். இந்த ஆதாரங்களின்படி பார்த்தால் நமது எம்.ஜி. ஆர். சந்தாத் திட்டத்தின்படி ரூ.13.00 கோடி திரட்டியதாக கூறப்படுவது பொய் என்பது மட்டுமின்றி, அந்த பொய்யை உண்மையாக்கும் நோக்குடன் போலியான ஆவணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழலில் இவற்றை கடுமையாக எடுத்துக் கொண்டு தான் தீர்ப்பளிக்க வேண்டும். அதை விசாரணை நீதிமன்ற நீதிபதி சரியாகவே செய்திருக்கிறார்.

இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் ஜெயலலிதா தரப்பினர் ரூ.12,00,59,338.76 செலவு செய்ததாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதா தரப்பின் பல்வேறு செலவுகளை கருத்தில் கொண்டு இந்தத் தொகை கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் ரூ.6,47,04,222 வளர்ப்பு மகன் சுதாகரனின் திருமணத்திற்காக ஜெயலலிதா செலவு செய்தது ஆகும். செலவுகள் தொடர்பாக ஜெயலலிதா கூறிய சில விளக்கங்களை ஏற்றுக் கொண்ட நீதிபதி மொத்த செலவில் ரூ. 3 கோடியை குறைத்துக் கொண்டு மொத்த செலவு ரூ.8,49,06,833 என்று பதிவு செய்தார்.

## சொத்துக்கள் தொடர்பான வாதங்கள்

ஜெயலலிதா தரப்புக்கு சொந்தமான 306 சொத்துக்களை ஆய்வு செய்து அவற்றின் மதிப்பு ரூ.55,02,48,215 என சிறப்பு நீதிபதி கணக்கிட்டிருக்கிறார். அரசுத் தரப்பால் நிரூபிக்க முடியாதவற்றின் மதிப்பை கழித்து தான் இந்த மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் ஜெயலலிதாவும் மற்ற எதிரிகளும் ஒன்று சேர்ந்து பெருமளவில் அசையும் சொத்துக்களையும், அசையா சொத்துக்களையும் வாங்கிக் குவித்துள்ளனர். இதுகுறித்து சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பில் 87.9 பத்தியில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. ஜெயலலிதா தவிர வேறு யாரும் வருவாய் ஈட்ட வில்லை என்பதை அரசுத் தரப்பு ஐயத்திற்கு இடமின்றி நிரூபித்திருக்கிறது. ஜெயலலிதாவின் சொத்துக்களில் புதிய கட்டிடங்களையும், கூடுதல் கட்டிடங்களையும் கட்டுவதற்காக மட்டும் ரூ.22 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. தங்கம் மற்றும் வெள்ளி நகைகளின் மதிப்பு ரூ.2.5 கோடி ஆகும். பங்குகள் மற்றும் வைப்பீடுகளின் மதிப்பு ரூ. 3.42 கோடியாகும். வாகனங்களின் மதிப்பு மட்டும் ரூ.1.29 கோடி ஆகும். இவை தவிர 3 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்களையும் ஜெயலலிதா தரப்பினர் வாங்கிக் குவித்துள்ளனர். இதையெல்லாம் சரியாக மதிப்பிட்டு தான் ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு ரூ.55 கோடி என்ற முடிவுக்கு சிறப்பு நீதிபதி வந்துள்ளார். இது ஆதாரங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சரியான கணக்கீடு ஆகும்.

## நிறைவு வாதம்

கர்நாடக அரசின் சார்பில் மேற்கண்ட வாதங்களை நான் முன் வைத்திருக்கிறேன். இந்த வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி அளித்தத் தீர்ப்பில் எந்த குறையும் இல்லை. எனவே, இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் தலையிடத் தேவையில்லை. எனவே, வழக்கின் தகுதியின் அடிப்படையிலும், மேல்முறையீட்டு மனு ஏற்கத்தக்கதல்ல என்ற அடிப்படையிலும் இதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*****************